**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.5/2025**
Prosecution: **PW3**

Deposition of the witness of **LW3**

| Name | திரு.அண்ணாமலை | District | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| Father Name | திரு.நடராஜன் | Occupation | தனியார் நிறுவனத்தில் வேலை |
| Village /Area | விளாபாக்கம் | Age | 30 |
| Taluk | ஆற்காடு | Driving Licence No. | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **27.11.2025.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள விளாபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள். அ.சா.1 சுதாகர் மற்றும் அ.சா.2 அஜித்குமார் ஆகியோரை எனக்கு தெரியும். நான் சென்னையிலிருந்து தீபாவளி விடுமுறையில் என்னுடைய கிராமத்திற்கு வந்தேன். 24.10.2022 அன்று இரவு 11.00 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்த போது ஜெய்கணேஷ், ராகுல் ஆகியோர் அங்கிருந்தார்கள். 1–ம் எதிரி யுவராஜ் என்பவர் சுதாகரையும், அஜித்குமார் ஆகியோரை கத்தியால் குத்தி ரத்தக்காயம் ஏற்படுத்தினார். சுதாகருக்கு காலிலும், அஜித்குமாருக்கு வயிற்றிலும் காயம் ஏற்பட்டது. அதை பார்த்து நான் தடுத்த போது 1–ம் எதிரி யுவராஜ் என்னுடைய வலதுகை நடுவிரல் மற்றும் மோதிரவிரலில் அதே கத்தியால் ரத்தக்காயம் ஏற்படுத்தினார். மற்ற எதிரிகள் அவர்களை பார்த்து உங்களை குளோஸ் பண்ணிவிடுவோம் என்று மிரட்டினார்கள். பின்பு அங்கிருந்த வினோத் மற்றும் பெருமாள் சத்தம் கேட்டு வந்தார்கள். எதிரிகள் அவர்களை பார்த்தவுடன் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் ஆற்காடு அரசு மருத்துமவனைக்கு சென்று சிகிச்சைப் பெற்றேன். சுதாகர் இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைப் பெற்றார். அஜித்குமார் முதலில்

ஆற்காடு அரசு மருத்துமவனைக்கு சென்று சிகிச்சைப் பெற்று, மேல் சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக 20 நாட்கள் சிகிச்சைப் பெற்றார். என்னிடம் காண்பிக்கப்படும் சா.பொ.1 கத்தி தான் 1–ம் எதிரி யுவராஜ் சம்பவத்தில் பயன்படுத்திய கத்தியாகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை நிறுத்தி வைத்து வழக்கை ஒத்திவைக்க கு.வி.மு.ச பிரிவு 231(2)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2025.11.27 16:55:12 -0500

I Additional District & Sessions Judge,
Ranipet.